**செய்தி வெளியீடு எண் : 1500** **நாள் : 27.07.2023**

**தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்**

**செய்தி வெளியீடு**

**சென்னையில் நடைபெற உள்ள ஆசிய ஆடவர் ஹாக்கி கோப்பை – 2023 போட்டியின் தொடக்க விழாவில் கலந்து கொள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் சார்பில், மாண்புமிகு ஒடிசா முதலமைச்சர் திரு. நவீன் பட்நாயக் அவர்களிடம் அழைப்பிதழ் வழங்கப்பட்டது.**

7ஆவது **"ஆசிய ஆடவர் ஹாக்கி கோப்பை சென்னை – 2023"** போட்டியானது, ஆகஸ்ட் 3ஆம் தேதி முதல் 12ஆம் தேதி வரை சென்னையில் நடைபெறவுள்ளது. இப்போட்டியை ஹாக்கி இந்தியாவுடன் இணைந்து தமிழ்நாடு அரசு நடத்த உள்ளது. 16 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த புகழ்பெற்ற ஹாக்கிப் போட்டி சென்னையில் மீண்டும் நடைபெற உள்ளது. இந்த போட்டியில் இந்தியா, சீனா, பாகிஸ்தான், மலேசியா, ஜப்பான், மற்றும் கொரியா ஆகிய 6 நாடுகள் பங்கேற்கின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுரையின்படி, சென்னையில் நடைபெற உள்ள ஆசிய ஆடவர் ஹாக்கி கோப்பை – 2023 போட்டியின் தொடக்க விழாவிற்கான அழைப்பிதழை தமிழ்நாடு அரசின் சார்பில் மாண்புமிகு ஒடிசா முதலமைச்சர் திரு. நவீன் பட்நாயக் அவர்களிடம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் திரு. ஜெ. மேகநாத ரெட்டி, இ.ஆ.ப., அவர்கள் (26.07.2023) அன்று முகாம் அலுவலகத்தில் நேரில் வழங்கினார்.

***********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in